திரு ஏ. எம். டி. நாச்சியப்பன் : தலைவர் அவர்களே, தற்சமயம் அரிசி விலை கூடுதலாகியிருக்கிறது. நெசவாளர்களுக்கு நூல் விலையும் மிகுதியாகியிருக்கிற காரணத்தினால் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது. ஆகவே நெசவாளர்கள் இருக்கக் கூடிய பகுதிகளில் நியாய விலைக் கடைகளை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : உறுப்பினர் சொல்வது போல இப்போது அரிசி விலை கூடுதலாக இல்லை. சென்ற ஆண்டு இருந்ததைவிடக் குறைவாக இருப்பதாகத்தான் புள்ளிவிவரம் வந்திருக்கிறது. எங்காவது நெசவாளர்கள் இருக்கிற பகுதியில் கஷ்டம் இருந்தால் எங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கிறோம்.

Cultivation of beedi leaves.

* 79 Q.—THIRU K. NAGARAJAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether there is any proposal to cultivate beedi leaves in the forest lands of Tamil Nadu?

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : இல்லை.

திரு க. நாகராஜன் : ஒரிசாவில் காட்டு நிலப்பகுதியில் பீடி இலைப் பயிரை பயிரிடுகிறார்கள். அதேபோல தமிழ்நாட்டு ஒதுக்கக் காடுகளிலும் பயிரிட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : தற்போதுதான் இல்லை என்று சொன்னேன். அதுபற்றி பரிசீலிக்கலாம்.

திரு தி. பொன்னுமலை : தமிழ்நாட்டில் உள்ள காடுகளில் ஏராளமான நிலம் இருக்கிறது. அந்த நிலங்களில் கஞ்சா பயிர் செய்தால் அரசாங்கத்திற்குக் கோடிக்கணக்கான பணம் வரும். வெளிநாட்டுச் செலாவணியும் கிடைக்கும். அப்பேர்ப்பட்ட இடங்களில் கஞ்சா பயிர் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பீடியில் இருந்து நேரே கஞ்சாவுக்கா ?

திரு தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : பீடி இலை பயிரிடவில்லை என்று சொன்னார்கள். என்னுடைய தொகுதியில் பாபநாசம் மலைப் பகுதிகளில் பழைய எம். எல். ஏ. பீடி இலை கடந்த எட்டு ஆண்டுகளாகப் பயிரிட்டு இருக்கிறார்கள் . . . .

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : புதியதாகத் திட்டம் இருக்கிறதா என்ற கேள்விக்கு இல்லை என்று சொன்னேன். காட்டு நிலங்கள் தனியாருக்குக் கொடுக்கப்பட்டு அவர்கள் பயிரிட்டு வருகிறார்கள்.

1972 டிசம்பர் 7]

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்ட தரைக்காடுகளில் நீலகிரி மரங்களைப் பயிரிடுகிறார்கள். அவற்றை அழித்து விட்டு பீடி இலைப் பயிரை வைப்பதற்கு அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : ஆலோசிக்கலாம்.

திரு. க. நாகராஜன் : அரசு நேரிடையாக முன்வராவிட்டாலும் கூட்டுறவுச் சங்கங்கள் முன்வந்தால் மலைக்காடுகளைக் குத்தகைக்கு விட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : நம் நாட்டில் காட்டுநிலப் பகுதி குறைவாகத்தான் இருக்கிறது. ஆகவே அவற்றில் அடர்த்தியான காடுகளை வளர்க்கும் திட்டம்தான் இருக்கிறது. சவுக்கு, மூங்கில், யுகலிப்டஸ் போன்றவற்றைத்தான் வளர்க்கிறோம். பீடி இலைப் பயிர் மூலம் காடுகளை வளர்க்க முடியும் என்றால் அதையும் பரிசீலிக்கலாம்.

திரு. நா. பழனிசாமி : பழனிமலைப் பகுதியில் பீடி இலை பயிரிடப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பீடிக்கு ஏகப்பட்ட கிராக்கி இருப்பது போலத் தெரிகிறது.

திரு. ந. தருமலிங்கம் : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் எந்த எந்த மாவட்டத்தில் பீடி இலைப் பயிர் செய்யப்படுகிறது ?

(விடை இல்லை.)

திரு. எம். தேவராசன்: நீலகிரியில் உள்ள காடுகளில் கஞ்சா நன்றாகச் செழித்து வளர்கிறது. கஞ்சாவுக்கு நல்ல கிராக்கியிருக்கிறது. பெரும்பான்மையான போதை தரும் மருந்துக்கள் அதில் இருந்து தயாரிக்கிறார்கள். ஆகவே அதை அங்கே பயிரிடுவார்களா ?

(விடை இல்லை.)

திருப்பூர் திரு. எ. எம். மொய்தீன் : நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிற பீடி இலைகளில் ஒருவகையான கசப்பு நிற்கிறது. நம் நாட்டில் பயிரிடப்படுவதற்கு நாடன் என்று பெயர். பீடி இலை இங்கே உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்றால் நம் நாட்டுப் பயிரைவிட்டு வடநாட்டுப் பயிரின் நாத்து, விதைகளைக் கொண்டுவந்து பயிரிட முன்வந்தால் நன்றாக இருக்கும் என்பதை அரசு உணர்கிறதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, இங்கே உற்பத்தி செய்யப்படுகிற இலை கசப்பாக இருக்கும் என்று சொல்கிறார்கள். கசப்பான காரியத்தை அரசாங்கம் செய்யாது என்று சொல்ல விரும்புகிறேன்.

[1972 டிசம்பர் 7

திரு. கே. கந்தசாமி: இந்த நாட்டில் தயாரிக்கப்படுகிற இலையில் ஒருவித கசப்பு நிற்கும் என்கிறார்கள். இதை அவர் தமது சொந்த அனுபவத்தில் இருந்து சொல்கிறாரா ?

திருப்பூர் திரு. எ. எம். மொய்தீன் : ஆம். என்னுடைய 42 வருஷ அனுபவத்தில் சொல்கிறேன். பீடி உபயோகிப்பவன். அந்தத் தொழிலை நடத்துபவன் என்ற முறையில் சொல்கிறேன்.

Guest house at Tiruvannamalai.

*80 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether a guest house has been constructed from temple funds at Tiruvannamalai in North Arcot District; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:

(அ) ஆம்.

(இ) மதிப்பீட்டு தொகை ரூ. 44,500. (ரூபாய் நாற்பத்து நான்கு ஆயிரத்து ஐநூறு மட்டும்).

இடவசதி :

ஒரு முன் தாவரம் 11′×8′, ஒரு வரவேற்பு அறை 12′×10′ ஒரு மன்றம் 24′—9″×10′, ஒரு சமயலறை 10′×8′, 2 மலசலம் கழிவிடம் (மேற்கண்டவை மின்சாரம், தண்ணீர் வசதிகளுடன் கூடியவை).

திரு. எஸ். கே. சுப்பிரமணியம்: இதுபோன்று பயணவிடுதிகள் கட்டப்படுகிற கோவில்களில் பகுத்தறிவுக் கொள்கை நூல்கள் அடங்கிய ஒரு நூல்நிலையத்தையும் திறக்க ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : நிதிவசதியுள்ள கோவில்களில் ஏற்கனவே நூல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

திரு. சொ. காவேரிமணியம் : இவ்வாறு கெஸ்ட் ஹவுஸ் கட்டுகிற நேரத்தில் அரசு மானியம் எவ்வளவு தருகிறது ? திருப்பரங்குன்றத்தில் ஒரு கெஸ்டு ஹவுஸ் கட்டும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : திருவண்ணாமலையில் கட்டப்பட்ட பயண விடுதிக்கு 50 சத விகிதம் கோவில் நிர்வாகத்தினர் பணம் கொடுத்தார்கள். 50 சத விகிதம் நன்கொடையாக வசூலித்துக் கட்டப்பட்டது. திருப்பரங்குன்றத்தில் கட்டுவது என்றால் அதுபற்றி அங்குள்ள அறங்காவலர்கள் தான் முடிவு செய்ய வேண்டும்.